# முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.125/2021

அரசு தரப்பு சாட்சி 4 (LW9 ) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | M.குணபாலன் | வட்டம் | - | |
| த/பெ | - | மாணிக்கம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 27.04.2026, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1, 3, 4 மற்றும் 7 ஆஜர். எதிரிகள் 5 மற்றும் 6 ஆஜர் இல்லை. அவர்கள் சார்பில் பிரிவு-317 கு.வி.மு.ச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 07.06.2016 அன்று திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்று காலை 10.00 மணியளவில் என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிதாஸ், காவலர் 2573 அன்புமணி, காவல் 2616 சங்கர் ஆகியோருடன் திண்டிவனம் கிடங்கல் 1 ஏரியின் அருகில் ரோந்து பணியில் இருந்தபோது அங்கு ஏரியில் உள்ள கருங்கல்லால் கட்டப்பட்ட கிணற்றங்கரையில் கும்பலாக உட்கார்ந்து இருந்தவர்கள் எங்களை பார்த்ததும் ஓட ஆரம்பித்தார்கள். நான் பாட்டி சகிதம் அவர்களை மடக்கி பிடித்தேன். ஆனந்தன் (எ) மிலிட்டிரி ஆனந்தன், சுதாகர், இசை (எ) இளையராஜா, மஸ்தான் ஆகியோரை நாங்கள் மடக்கி பிடித்தோம். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்களா என்றால் மிலிட்டிரி

ஆனந்தன் உள்ளார், மற்றவர்களையும் நான் பிடித்த ஞாபகம். ஆனால் வருடங்கள் கடந்ததால் குறிப்பாக பெயர் சொல்ல முடியவில்லை. 3 தப்பிய ஓடிய நபர்கள் பற்றி விசாரித்தபோது அவர்கள் பெயர் பிரவின், சுரேஷ், கனகராஜ் என்று கூறினார்கள். அவர்கள் இருந்த இடத்தை சோதனை செய்தபோது அங்கு வெடிபொருட்கள் தயாரிக்க தேவையான பொருட்களும், 3 நாட்டு வெடிகுண்டுகளும் இருந்தன. அதை பற்றி அவர்களிடம் கேட்ட போது நாட்டு வெடிகுண்டுகள் தயாரித்ததாக கூறினார்கள்.

பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் காவலரை பாதுகாப்பு பணிக்கு நியமித்துவிட்டு திண்டிவனம் காவல் நிலையம் வந்து தடய அறிவியல் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் அவர்களுக்கு தகவல் கொடுத்த பின்பு அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். தடய அறிவியல் ஆய்வாளர் சண்முகம் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து அங்கிருந்த பொருட்களை பார்த்துவிட்டு அவை அனைத்தும் நாட்டு வெடிகுண்டுகள் தயாரிக்க பயன்படும் பொருட்கள் என்று கூறினார். 3 நாட்டு வெடிகுண்டுகள் அங்கு இருந்தது. அவைகள் நாட்டுவெடிகுண்டுகள் என்று கூறினார். பின்னர் எதிரிகள் நான்கு பேரையும் காரணம் கூறி கைது செய்து அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். (ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்றுபொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் ஒப்புதல் வாக்குமூலம் குறியீடு செய்யப்படவில்லை) சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். வரைபடம் அதசாஆ.4 ஆகவும் பார்வை மகசர் அதசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் தடய பொருட்களை கிராம நிர்வாக அலுவலர் பாஸ்கர் மற்றும் கிராம உதவியாளர் மகிபாலன் முன்னிலையில் மிலிட்டிரி ஆனந்தன், சுதாகர், இளையராஜா, மஸ்தான் ஆகிய எதிரிகள் எடுத்து கொடுத்த பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த மகசர் அதசாஆ.6 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. கைப்பற்றபட்ட பொருட்களில் நாட்டு வெடிகுண்டுகளை தவிர்த்து மற்றவை ஏற்கனவே சான்றுபொருட்கள் 1 முதல் 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு நிலையம் திரும்பி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.414/2016 பிரிவு வெடிபொருகள் சட்டம் 5ன் கீழ் எதிரிகள் பெயரில் பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபர்களை தக்க வழிகாவல் துணையுடன் திண்டிவனம் குற்றவியல் நீதிமன்றம் எண்.1க்கு அனுப்பிவைத்தேன். நான் கைப்பற்றிய பொருட்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசரை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த படிவம் அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் 3 வெடிகுண்டுகளை பாதுகாப்பாக வைக்க உத்தரவிடுமாறு நீதித்துறை நடுவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அந்த கடிதம் அதசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் வெடிகுண்டுகளை செயலிழக்க செய்வது சம்மந்தமாக கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஜாபிதாவுடன் மேலும் ஒரு வேண்டுகோள் கடிதம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பினேன். அந்த கடிதம் அதசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி ரவிதாஸ், அன்புமணி, சங்கர், பாஸ்கர், மகிபாலன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

13.06.2016 அன்று வழக்கின் எதிரி சுரேஷ் என்பவரை பகல் 10.30 மணிக்கு திண்டிவனம் பேருந்து நிலையம் முன்புள்ள மேம்பாலம் அருகே கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். சுரேஷ் கைது செய்யப்பட்ட போது நான் தயார் செய்த கைது குறிப்பாணை அதசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கைது குறிப்பாணை நகல் ஏற்கனவே எதிரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது)

பின்பு மேல்விசாரணைக்காக காவல்துறை ஆய்வாளருக்கு கோப்பினை அனுப்பினேன்.

எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்குவிசாரணை:

ரோந்து பணிக்கு நாங்கள் காவல் துறை ஜீப் வாகனத்தில் சென்றோமா என்றால் இல்லை, தனித்தனியாக 4 இருசக்கர வாகனங்களில் சென்றோம். இவ்வழக்கில் முதலில் பார்வை மகசர் தான் தயார் செய்தேன் என்றால் ஆமாம். அதன் பிறகு தான் மற்ற ஆவணங்கள் தயார் செய்தேன் என்றால் ஆமாம். பார்வை மகசர் தயார் செய்த பிறகு 4 மணி நேரம் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் ஆமாம். ஆனால் நான் தயார் செய்த பார்வை மகசரில் குற்ற எண்ணும், சட்ட பிரிவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஏற்கனவே எனக்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கடைசி வழக்கின் குற்ற எண் தெரியும் என்பதால் அதற்கு அடுத்த எண் குறிப்பிட்டு பார்வை மகசர் தயாரித்தேன். இந்த வழக்கிற்கு முன்பு நான் பதிவு செய்த வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் தெரியும், இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் சான்றுபொருட்களை சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக தான் கூறியுள்ளேன் என்றும் சான்றுபொருட்களை எதிரிகள் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றோ அதனை நான் கைப்பற்றினேன் என்றோ கூறிவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் கிராம நிர்வாக அலுவலரின் பெயரை கூறியுள்ளேனா என்றால் இல்லை. கணபதி மற்றும் ஆனந்த் என்ற இரண்டு கிராம உதவியாளர்கள் சம்பவ இடத்திற்கு வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. சான்றுபொருட்களை எடைபோட்டவர் யார் என்றும் எந்த உபகரணம் மூலம் எடைபோட்டேன் என்றும் முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் தடய

அறிவியல் அலுவலர் கொண்டுவந்த உபகரணம் மூலம் எடை போட்டு எடை அளவு குறிக்கப்பட்டது. தடய அறிவியல் அலுவலர் உபகரணம் கொண்டுவந்தார் என்றும் அதன் மூலம் சான்றுபொருட்கள் எடை போடப்பட்டது என்றும் முதல் தகவல் அறிக்கையிலும் மற்ற சாட்சிகளின் வாக்குமுலங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வெடிகுண்டுகளை சம்பவ இடத்திலிருந்து யார், எந்த முறையில் எடுத்துவந்தார்கள் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் நானும் என்னுடன் வந்த காவலர்களும் 3 நாட்டுவெடிகுண்டுகளை தண்ணீரில் போட்டு எடுத்து சென்றோம். இந்த விபரத்தை என்னுடன் வந்த காவலர்கள் அளித்த வாக்குமூலங்களில் கூறியுள்ளார்களா என்றால் இல்லை. அதன் பின்பு அந்த நாட்டு வெடிகுண்டுகள் எங்கு வைக்கப்பட்டது என்ற விபரத்தை முதல் தகவல் அறிக்கையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலும் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதசாஆ.9 மற்றும் 10 வேண்டுகோள் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜாமணி வானவெடி கடை அரசு அனுமதி பெற்ற கடை என்பதற்கான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கைப்பற்றியுள்ள சான்றுபொருட்கள் தனி நபர்களுக்கு விற்கப்படமாட்டாது என்றும் அரசு அனுமதி பெற்ற வெடிபொருள் கடைகளுக்கு தான் விற்கப்படும் என்றும் சொன்னால் சரிதான், எதிரிகள் எப்படி வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் மேற்படி சான்றுபொருட்களை (மூலப்பொருட்கள்) யாரிடமிருந்து வாங்கினார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் எதிரி மிலிட்டிரி ஆனந்தன் ஒப்புதல் வாக்குமூலத்தில் பாண்டிச்சேரியிலிருந்து வாங்கி வந்ததாக கூறினார், ஆனால் யாரிடம் வாங்கினார் என்று கூறவில்லை. மூலபொருட்கள் 10.02.2017 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் 07.06.2016 அன்று நீதித்துறை நடுவரிடம் மூலப்பொருட்கள் காண்பிக்கப்பட்டது, அவர் அதனை அடுத்த வேலைநாளில் ஒப்படைக்கும்படி கூறினார். மீண்டும்

மூலபொருட்கள் 8 மாதங்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 8 மாதங்களும் மூலப்பொருட்கள் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்றால் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கைப்பற்றிய நாட்டுவெடிகுண்டுகளை செயலிழக்கம் செய்துகொடுக்கும்படி சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் சான்றுபொருட்களை கைப்பற்றுவதற்கு சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சென்றேன் என்றும் அப்போது தான் கிராம நிர்வாக அலுவலருக்கும், தடய அறிவியல் ஆய்வக அலுவலருக்கும் தகவல் தெரிவித்தேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சான்றுபொருட்கள் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்றும் கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர் ஆகியோர் சம்பவ இடம் வரவில்லை என்றும் எதிரிகள் மீது ஏற்கனவே வழக்கு உள்ளதால் அவர்கள் மீது மீண்டும் ஏதாவது ஒரு வழக்கு போடவேண்டும் என்ற காரணத்தால் பொய் வழக்கு போடப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு சாதகமாக என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் அவர்கள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

ARUMUGAM MANIMOZHI

Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.04.28 05:45:28 +0530

Principal District Judge,

Villupuram.